(இ) தீர்மானங்களின்மேல் பள்ளிக் கல்வி இயக்குநர் குறிப்புரைகள் அனுப்பியுள்ளார். அவை அரசின் ஆய்வில் உள்ளன.

Model Schools

*245. Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the Government have any proposals to offer incentives to the private sector for opening model schools in the State; and

(b) if so, the details thereof?

மாதிரிப் பள்ளிகள்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் மாதிரிப் பள்ளிகளைத் தொடங்க தனியார் துறைக்கு ஊக்கம் அளிப்பதற்கான செயற்குறிப்புகள் எவையும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆமென்றால், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. அய்யணன் அம்பலம்: தலைவர் அவர்களே, மாதிரிப் பள்ளி என்றால் என்ன? அதிலுள்ள கல்வித் திட்டத்தில் ஏதாவது மாற்றங்கள் உண்டா? அதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாதிரிப் பள்ளி என்று இரண்டு இடங்களிலே இப்பொழுது வைத்திருக்கின்றோம். புதுக்கோட்டையிலே ஆண்களுக்கும், சென்னையிலே பெண்களுக்கும் இருக்கின்றது. அதிலே தலைமை ஆசிரியர்களாக இருப்பவர்கள் பேராசிரியர்கள் அளவுக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே பணிபுரிகிறவர்களை பி.ஏ., பி.டி.-க்குப் பதில் எம்.ஏ., பி.டி. படித்தவர்களாக வைத்து, மாநிலம் முழுதும் ஒரு தேர்வு நடத்தி, அதிலே அதிக எண்கள் வாங்குகிறவர்களை மட்டும் அந்தப்

பள்ளியிலே வைத்து, அதிலே ஏற்படுத்துகின்ற முறைகளை மற்றப் பள்ளிகள் பின்பற்றலாம் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே அந்த இரண்டு பள்ளிகளையும் ஏற்படுத்தினோம். ஆனால், இப்பொழுது 'காம்ப்ரகென்சிவ் ஸ்கூல்' என்ற அளவுக்கு தொழில் கல்வி, விவசாயம், தையல், தச்சு, வானொலி ரிப்பேர், தொழில் நுட்பக் கல்வி எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்லிக்கொடுக்கக்கூடிய அளவுக்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 200 பள்ளிகள் அமைக்கலாமா என்கின்ற ஒரு திட்டம் இருக்கிறது. அதற்கு மூன்று கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1974-75 ஆம் ஆண்டில் ஒரு 10 பள்ளிகளை நிறுவுவதற்காக ரூ. 8,50,000 நிதி நிலை அறிக்கையிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பத்துப் பள்ளிகளை இந்த ஆண்டு ஏற்படுத்திய பிறகு, மேலும் அடுத்தடுத்த ஆண்டுகளில் விரிவுபடுத்தலாம் என்ற எண்ணமும் இருக்கிறது.

(பிற்பகல் 4.30)

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, மாதிரிப் பள்ளிகளைத் தனியார் துறையில் தொடங்காமலிருக்க அரசு எற்றுக்கொண்டுள்ள முடிவினைப் பாராட்டுகிறேன் நான். அதைப் போலவே ஆரம்பப் பள்ளிகளையும் தனியார் துறையில் தொடங்காமலிருக்க அரசு முடிவு செய்யுமா? ஏனென்றால், தனியார் பள்ளிகள் அநேகமாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மதித்து நடப்பதில்லை. எனவே தனியார் இப்படிப்பட்ட ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்காமலிருக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படி ஒரு முடிவை எடுப்பதற்கு இல்லை. ஆனால் பெரும்பாலான ஆரம்பப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால்தான் இப்போது ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் யாரையும் இது விஷயத்தில் தடுத்து நிறுத்துவதற்கில்லை. அடிப்படை உரிமை பாதிக்கப்படுகின்றது என்று அவர்கள் சொல்லக்கூடும் அப்படித் தடுத்தால். ஆனாலும் அவற்றை முறையாகக் கட்டுப்படுத்துவதற்காக பல கட்டுதிட்டங்கள், பல சட்டங்கள் இருப்பதால், அவற்றைத் தடுக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. எல். பலராமன் : மாதிரிப் பள்ளிகளில் அரசு கண்ட அனுபவத்தில், அதில் படிக்கும் மாணவர்களிடையிலே எந்த அளவிற்கு பயிற்சியும் நல்ல தேர்வும் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்பதை அரசு உணர்ந்திருக்கின்றதா? பத்து இடங்களிலே ஆரம்பிக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பத்து இடங்கள் எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாதிரிப் பள்ளிகள் என்பது வேறு, 'கம்ப்ரெஹென்ஸிவ்' பள்ளிகள் என்பது வேறு. மாதிரிப் பள்ளிகள் என்பவை சென்ற ஆண்டிலேதான் தொடங்கப்பட்டன. 'காம்ப்ரெஹென்ஸிவ் ஸ்கூல்ஸ்' என்பவை இந்த ஆண்டிலிருந்துதான் துவங்கப்படும்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, உதகமண்டலத்திலே லாரென்ஸ் பள்ளிக்கூடம் என்று ஒரு பள்ளிக்கூடம் இருப்பது அனைவருக்கும் தெரிந்திருக்கலாம். அதிலே பணியாற்றி ஓய்வு பெற்ற தாமஸ் என்பவர் இந்த ஊரில் ஒரு பள்ளிக்கூடத்தை நடத்தி வருகின்றார். அது பப்ளிக் ஸ்கூல் என்று சொல்லப்படுகிறது. அந்தப் பள்ளிக்கூடப் பாடத் திட்டங்களுக்கும் மாடல் ஸ்கூல் பாடத் திட்டங்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. இவை தனி ஸிலபஸ்களின்கீழ் ஆரம்பித்து, மெட்ரிகுலேஷன் என்ற அளவிற்குப் போகின்றது. ஆங்கிலத்திலே பாட போதனை நடத்துகின்றார்கள். நாம் வைக்கும் காம்ப்ரெஹென்ஸிவ் ஸ்கூலில் தொழில் நுட்ப அறிவையும், 'ஜாப் ஓரியெண்டேஷன்' என்று சொல்லத்தக்க அளவிலே, அதையும் புகுத்தி அவை ஒரு எடுத்துக்காட்டாக இயங்கத்தக்க அளவிற்கு அமைய இருக்கின்றன.

Narcotic Drugs

* 246 *Q.*—THIRU M. ARUMUGASWAMI (ON BEHALF OF THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Health be pleased to state the steps that are being taken by the Government to prevent the misuse of Narcotic Drugs by the public ?

போதையூட்டக்கூடிய மருந்துப்பொருள்கள்

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

போதையூட்டக்கூடிய மருந்துப் பொருள்கள் பொதுமக்களால் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் யாவை?